




வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

### அமைச்சர் மா. மதிவேந்தன் தலைமையில்

# வன உயிரியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்!

## வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம்!

சென்னை, செப்.2-

வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று (01.09.2023) வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் வன உயிரின பூங்காக்களில் நடைபெற்று வரும் செயல்பாடுகள் குறித்து துறை ரீதியான தலைவர்கள் அமைச்சர்களிடம் விளக்கம் அளித்தனர். அறிஞர் அண்ணா உயிரியியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா, வேலூர் அமிர்தி உயிரியியல் பூங்கா, சேலம் குரும்பட்டி உயிரியில் பூங்கா மற்றும் திருச்சி உயிரியல் பூங்கா ஆகியவற்றின் தற்போதைய மேம்பாட்டு பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அமைச்சர் அவர்கள் உயிரியியல் பூங்காக்களில் உள்ள விலங்குகள் நலன் குறித்தும், வன உயிரினங்களுக்கு வனத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் மருத்துவம் குறித்தும் கேட்டறிந்தார். பூங்காக்களைச் சுற்றி பார்க்க வருகை தரும் பொது மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தவும் அறிவுரை வழங்கினார். மேலும் வண்டலூர் உயிரியியல் பூங்காவில் கூடுதல் விலங்குகளை காட்சிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தமிழக முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க கிண்டி சிறுவர் பூங்காவில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும் சேலம் உயிரினப் பூங்காவில் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் அவர்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்வாய்வு கூட்டத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சுப்ரத் மஹபத்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாசரா ரெட்டி, இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு திருமதி த.தமிழ்மொழி, அமுது அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா துணை இயக்குநர் (பொறுப்பு), திருமதி. காஞ்சனா மற்றும் சென்னை, சேலம், திருச்சி, வேலூர் மாவட்ட வன அலுவலர்கள் பிரசாந்த், சாசாங், கலாநிதி, திருச்சி உதவி இயக்குநர், சம்பத் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ‘மகா கவிதை!’

## கவிப்பேரரசு வைரமுத்துவின் புத்தம் புதிய கவிதை நூல்!

சென்னை, செப். 2-

இதுவரைஎந்தஊடகத்திலும்வெளிவராத கவிஞர் வைரமுத்துவின் புத்தம் புதிய படைப்புக்கு ‘மகா கவிதை’ என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

நூலின் தலைப்பும் முகப்பும் வெளியிடப்பட்டி ருக்கின்றன. கவிஞர் வைரமுத்துவின் 39ஆம் படைப்பு இது. நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு வெளிவரும் கவிஞர் வைரமுத்துவின் கவிதை நூல் இதுவாகும்.

நிலம், நீர், தீ, வளி, வெளி எனும் ஐம்பூதங்களையும் ஆராய்ந்து படைத்த கவிதையாக ‘மகா கவிதை’ அறியப்படுகிறது.

தமிழில் இந்த வகை இலக்கியத்தில் இதற்குமுன் இல்லாத புது முயற்சி என்று சொல்லலாம்.

‘சூர்யா பதிப்பகம்’ நூலைத் தீவிரமாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

“சில மாதங்களில் நூல் வெளியிடப்படும்” என்று கவிஞர் வைரமுத்து அலுவலகம் தெரிவிக்கிறது.




